**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்.**

எ.ம.சா. 2 நாள்: 28.01.2026

வழக்கு எண் **MCOP No. 42/2022**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிராஜிதீன் | ஊர் | : சின்னமனூர் |
| தந்தை பெயர் | : ஷேக் தாவுத் | தாலுகா | : உத்தமபாளையம் |
| தொழில் | : Departmental store | வயது | : 50/2026 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**1, 2 எதிர்மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சியின் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 2 ஆம் எதிர் மனுதாரர் ஆவேன். எனது தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்கு மூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கின்றேன்.

1. 25.07.2012 ஆம் தேதியிட்டுஎன்னுடைய வாகனமான மகேந்திரா cylo வாகனம் TN 60 T 4605 என்ற வாகனத்திற்குரிய பதிவு சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது **எ.மா.சா.ஆ. 3**

2. எனது ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது **எ.மா.சா.ஆ.4**

3. 02.10.2021 ஆம் தேதியிட்டு நான் 3 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் எனது வாகனத்தினை காப்பீடு செய்ததற்கான பாலிசி அசல் **எ.மா.சா.ஆ.5**

மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டிபிரார்த்திக்கிறேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் எனக்கு சொந்தமான வாகனம் என்றால் சரிதான். என்னுடைய பரிந்துரையின் படி தான் 1ஆம் எதிர் மனுதாரர் என்னுடைய வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் விபத்திற்குண்டான எனது வாகனத்திற்கு காப்பீடு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். அதனால் மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் ஆகாததால் 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பிலான குறுக்கு விசாரணையை நீதிமன்றம் தன்னிட்சையாக முடித்து வைக்கிறது. )

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR
Digitally signed by SANKAR
Date: 2026.01.28 15:23:20 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**